பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 08 2024 **MONDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மருத்துவர்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைப்பதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

2. தமிழகத்தின் ரயில்வேத் திட்டங்களுக்கு மத்திய அரசு போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

3. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களின் நலனுக்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு சி வி கணேசன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. 17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டி ஜோர்டானின் **Amman**-னில் இன்று தொடங்கியது.

*-- இனி விரிவான செய்திகள் --*

<<<<<<>>>>>>

மருத்துவர்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைப்பதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று சென்னையில் தமது துறையின் தென்மண்டல ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர், அகில இந்திய வானொலி வளாகத்தில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - முருகன் (1) – 18 செகண்ட்ஸ்)*

சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் தொழிலாளர்களுக்காக கட்டப்பட்ட தங்குமிடத்திற்கு மத்திய அரசுதான் 80 சதவீத நிதியை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - முருகன் (2) – 50 செகண்ட்ஸ்)*

செய்திகளின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்கென தனிப்பிரிவு 2019-ஆம் ஆண்டு முதலே மத்திய அரசின் பத்திரிகை தகவல் அலுவலகத்தில் செயல்பட்டு வருவதாக கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - முருகன் (3) – 34 செகண்ட்ஸ்)*

மருத்துவப்படிப்புகளுக்கான இடங்களை மத்திய அரசு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் திரு எல். முருகன் கூறினார்.

*(சவுண்ட் பைட் - முருகன் (4) – 19 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ரயில்வேத் திட்டங்களுக்கு போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்வதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவுக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் தெற்கு ரயில்வேத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறைவாக உள்ளதாக அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதி பற்றாக்குறை காரணமாக இருக்கக்கூடாது என்றும் திரு மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

கிழக்கு கடற்கரை சாலையில் நடைபெற்றுவரும் பணிகளை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுமாறு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இன்று இப்பணிகளை ஆய்வு செய்த அவர், திருவான்மியூர் முதல் உத்தண்டி வரையிலான 15 கிலோமீட்டர் நீளம் வழித்தடத்தில் உயர்மட்ட மேம்பாலம் அமைப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இது அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும், இப்பாலப்பணிகள் நிறைவடைந்தால் இந்த வழித்தடத்தை 20 நிமிடங்களில் கடக்க இயலும் என்றும் திரு எ வேலு கூறினார்.

<<<<<<>>>>>>

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு சி வி கணேசன் கூறியுள்ளார்

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய மாணவர்களுக்கான பயிற்சியை இன்று அம்பத்தூரில் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மாநிலம் முழுவதும் 102 அரசு மற்றும் 306 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்ற மாணவர்களில் 80 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் திரு சி வி கணேசன் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 45 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, நீலகிரி மாவட்டம் உதகை, கோத்தகிரி ஆகிய பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம் உடுமலை பஞ்சலிங்க அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் பஞ்சலிங்க அருவி பகுதிக்கும், கோவிலுக்கும் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

கும்பகோணம் கோவில் குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றாவிட்டால் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர், அக்டோபர் 28-ஆம் தேதி நேரில் ஆஜராக வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் கெடு விதித்து உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு சுப்பிரமணியன், திரு அப்துல் குத்தூஸ் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இவ்வழக்கின் விசாரணையும் அக்டோபர் மாதம் 28-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டையில் புதிய சமுதாயக்கூடத்திற்கான கட்டிடத்தை மாநில அமைச்சர் திரு ரகுபதி இன்று திறந்துவைத்தார்.

-----------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது அதிகாரிகள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆட்சியர் திருமதி அழகுமீனா அறிவுறுத்தியுள்ளார்.

-----------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளியில் மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு அளித்த புகாரின் அடிப்படையில் பள்ளி தாளாளர் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி சரயு கூறியுள்ளார்.

-----------------

நாமக்கல் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் டாக்டர் உமா இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

--------------

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் புதிய குடும்ப அட்டைகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

-------------------

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் உள்ள அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோவில் குடமுழுக்கு விழாவை முன்னிட்டு

வரும் வெள்ளிக்கிழமை அம்மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

---------

பேச்சிப்பாறை அணையிலிருந்து உபரிநீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், திற்பரப்பு அருவியில் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டி ஜோர்டானின் **Amman-**ல் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் **Nishant Phogat** உட்பட 29 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

-----------------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் பூட்டானை வென்றது.

நேபாளின் லலித்பூரில் நடைபெற்ற இப்போட்டியின் 37-ஆவது நிமிடத்தில் இந்தியாவின் **Monirul Molla** கோல் அடித்தார்.

-------------

**Goodwill** கோப்பைக்கான சர்வதேச பாரா துடுப்புப்படகு போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மாஸ்கோவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 500 மீட்டர் பிரிவில் **Vinay Kumar Kush**–வும், ஆடவர் 200 மீட்டர் பிரிவில் **Krishnakumar Samana** –வும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

--------------

ஸ்லோவேக்கியாவில் நடைபெற்ற சைக்கிள் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Harshveer Sekhon** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**<<<<<<END>>>>>>**